355

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி க. ரக்தாக்ஷிஹூ மார்கழிமீ பகுதி கஉ.
Vol. 1. December & January. No. 12.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

காரப்பங்காடு,
ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.

மேலும் "யதித மகணயித்வா துர்வஹம் சுரோணி பாரம், மத வி சரணலோபாத் ப்ரஸ்திதம் பத்மதாம்ரம், அயமஹமபி வாஞ்சாம் யப்ரம்ருஜ்யேவ பாம்ஸூம், ஸூமுகி வததலம்தே சூடதும் சும்பிதும் வா" என்றும் "ரதிஸமயே தருணீநாம் பூஷாஹாநிரபி பூஷண பவதி" என்றும் சொல்லுகிற வாக்கியங்களிலும் கண்டுகொள்ள லாம். இதன் அர்த்தம்.-என்னிடத்தில்வர விரும்பிய ஆசையால், வகிக்கக்கூடாதிருக்கிற நிதம்ப பாரத்தையும் எண்ணாமல், பிரயாணம் புறப்பட்டு வருவதால் செந்தாமரை மலர்போற் சிவந்திருக்கிற உன் பாத தலத்தை நடந்துவரும்போது படிந்து கிடக்கிற தூளிகளைத் துடைக்காமலே சிரோபூஷணமா யணியவும், முத்தமிட்டுக்கொள்ளவும் இச்சிக்கிறேன் என்பதும், ரதிகாலத்தில் ஸ்த்ரீகள் ஆபரணமில்லாமலிருப்பதே அழகாகுமென்பதும் ஆம்.

இப்படி க்ஷூத்ரனான சேதனனுக்கும் ஜ்ஞானமில்லாத தேநுவுக்கும் இருந்தால் பரம சேதனனும் பரம ரஸிகனுமுள்ள ஸர்வேசுவரனுக்கு "ஜ்ஞாநீத்வா த்மைவ மே மதம்" என்றும், "ப்ரியோஹி ஜ்ஞாநிநோத் யர்த்தம்" என்றும், "அத்யர்த்த ப்ரியம் ஜ்ஞாநினம் லப்த்வா" என்றும், சொல்லுகிறபடியே அத்யந்தாபிமதனை ஜ்ஞானி விஷயத்தில் இப்படியிருப்பது கிம்புனர்ந்யாயஸித்தம் இப்படி யிருக்க,

'நிகரில்புகழா' யென்று ஒப்பில்லாத குணமாகச் சொல்லப் பட்டதோஷஸூ குணத்வபுத்திரூபமான வாத்ஸல்யத்தைத் தோஷமென்று சொல்வது குணேஷூதோஷத்வ புத்திகார்யம். ஆனல்,

தேசிகன் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும், சரணாகதிகத்யபாஷ்யத்திலும், "யதா தேநோர் வத்ஸே" என்கிற சுருதப்ரகாசிகாகாரர் வாக்யத்தை யெடுத்துக்காட்டி, "கேஷாஞ்சித் அதிவாத:" என்பதால், தோஷேஷு குணத்வ புத்தியாக வாத்ஸல்யத்தைச் சொல்லக் கூடாது என்று அருளிச்செய்திருப்பது கூடும்படி எங்ஙனே யென்னில், அவரே தயாக சதகத்தில் 'வாத்ஸல்யம் தோஷ போக்யத்வம்' என்று அருளிச்செய்திருப்பதாலும், அதை அநுஸரித்தே தத்ஸம்ப்ரதாயஸ்தரான ரங்கராமாநுஜஜீயரும் உபநிஷத்பாஷ்யத்தில், அருளிச்செய்திருப்பதாலும், இப்படி இருந்துள்ள வாத்ஸல்யத்துக்கே அநேக ப்ரமாண உபபத்திகளிருப்பதாலும் அந்த பக்ஷத்தில் நைர்ப்பர்யமில்லாமையாலும் ப்ரௌடவாதமா மித்தனை.

தோஷ போக்யத்வம் வாத்ஸல்யமென்று சொல்லும் பக்ஷத்தில், போக்யமான தோஷத்தையே பண்ணும்படி நேரிடும் என்கிற தூஷணம் தோஷாதர்சனம் வாத்ஸல்யம் என்று சொல்லுகிற பக்ஷத்திலும் ஸமானம். பூர்வாக விஷயத்திலும், ப்ராமாதிகமான உத்தராகத்திலும், அவர்ஜநீயமான சாரீரதோஷத்திலும் ஏற்படுகிற குணத்வபுத்தி அதிப்ரேம கார்யமாகையால் தோஷமாகாது. "திருமாலிருஞ்சோலைமலையே" என்கிற பாட்டில் உகந்தருளின நிலங்களில் பண்ணும் விருப்பத்தை, ப்ராக்ருதமாகையாலே ஹேயமாயிருந்துள்ள ஆழ்வாருடைய விக்ரஹைகதேசத்தில் பண்ணுகிறான் என்று இருப்பது கண்டு கொள்வது. இப்படி யிருப்பதால் ஆழ்வாருடைய சரமவிக்ரஹத்தை, பொலிந்துநின்றபிரான் ஸந்நிதியிலேயே திருப்பள்ளிப்படுத்தியிருப்பதும், கோயிலில் ஸ்ரீ பாஷ்யகாரருடைய சரமவிக்ரஹத்தை, பெருமாளுடைய வஸந்த மண்டபத்தில் திருப்பள்ளிப்படுத்தியிருப்பதும், திருமழிசைப் பிரானுடைய சரமவிக்ரஹத்தை ஆராவமுதாழ்வான் ஸந்நிதிக்கு ஸமீபத்தில் திருப்பள்ளிப்படுத்தியிருப்பதும் கண்டு கொள்ளலாம். அப்படியே திருமலையிலும் அனந்தாழ்வான் சரமவிக்ரஹத்தைத் திருப்பள்ளிப்படுத்தின இடத்துக்கு திருவேங்கடமுடையான் ஸம்வத்ஸரந்தோறும் எழுந்தருளி ஸ்ரீ சடாரி சாதித்து வருவதும் கண்டுகொள்ளலாம்.

இப்படியாக, ப்ரமாணங்களாலும், அநுஷ்டானத்தாலும், உபபத்தியாலும் ஸ்நேஹத்தினுடைய உத்கடாவஸ்தையான வாத்ஸல்யம் நிரூபிக்கப்பட்டது.

357

இனி ஸௌசீல்யமாவது உயர்ந்தவன் இழிந்தவனோடே கலக்கும்போது புரையற்றிருக்கை. புரையற்றிருக்கையாவது:- தன்னுடைய உயர்த்தியும் தன்னையடைந்தவனுடைய தாழ்வும் பாராட்டாமை. ஸ்ரீ ராமாயணத்தில் ராவணவதாநந்தரம், ப்ரஹ்மாதிகள் "பகவான்நாராயணோ தேவ:" என்று பெருமாளுடைய உயர்த்தியைச்சொல்ல பெருமாள் அதைவிரும்பாமல் "ஆத்மானம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்பதால் தன்னை தசரத குமாரனான ஒரு மனுஷ்யனென்றெண்ணுகிறேன் என்று அருளிச்செய்கையாலும், ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில், கோவர்த்தநோத்தாரணாநந்தரம், "தேவோவா" இத்யாதி சங்கித்துச் சொல்லியவற்றை விரும்பாமல் "நாஹம் தேவோ நகந்தர்வ:" அஹம்வோ பாந்தவோ ஜாத:" என்பவற்றால் நான் தேவனுமல்லன்; கந்தர்வனுமல்லன்; உங்களுக்கு பந்துவாக வந்து பிறந்தவன் என்று கண்ணன் அருளிச்செய்தமையாலும் இந்த ஸௌசீல்யகுணம் விளங்கும்.

இனி, ஸௌலப்யமாவது:— கண்ணுக்குவிஷயமாகாத தன்னை ஸம்ஸாரிகள் கண்ணுக்கு விஷயமாக்குகை. இந்த குணம் விபவத்திலும், அர்ச்சாவதாரத்திலும் காணலாம். விக்ரஹகுணங்கள் காந்தி ஸௌகுமார்யாதிகள். ஈசுவரனுக்கு விக்ரஹம் உண்டென்பதற்குப் பிரமாணம் "யஏஷோந்த ராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவ மக்ஷிணீ" என்றும், நீலதோயத மத்யஸ்தா" என்றும், "ஆதித்ய வர்ணம் தமஸஸ்து பாரே" என்றும் சொல்லுகிற சுருதிகளும் ஸ்மிருதீதிஹாஸ புராணங்களுமாம். ஈசுவரனுக்கு சரீரமில்லை என்று சுருதிகள் சொல்லியது கர்மநிபந்தனமான சரீரமில்லையென்பதை உபபாதித்தபடி இன்னும் இவைகளுடைய நிரூபணம் மேலேவரும்.

ஸர்வசேஷியாயிருக்கையாவது:— ஸமஸ்தங்களான சேதனாசேதனங்களையும் தன்னுடைய அதிசயாதானத்துக்கு உறுப்பாக விநியோகிக்கைக்கு ஹேதுவான ஸம்பந்த விசேஷம். ஸ்வாமித்வமாவது:— சேதனர்கள் விமுகர்களான தைசையிலும் அவர்களுடைய ஸத்தாஸ்தித்யாதிகளை தான் அவர்களுக்கு அந்தர்யாமியாயிருந்தும், மற்றும் அவர்கள் மாதாபித்ராதிகளுக்கு அந்தர்யாமியாயிருந்தும் நிர்வஹிக்கைக்கு உறுப்பான ஸம்பந்த விசேஷம். இந்த விஷயமும் மேலே நிரூபிக்கப்படும்.

இனி, ஸர்வகர்ம ஸமாராத்யனுகையாவது:— சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் விதிக்கப்பட்டிருக்கிற நித்ய நைமித்திக காம்யகர்மங்களுக்குத் தானே ஆராத்யனுயிருக்கை ஆனால் அக்நீந்த்ராதி தேவர்களை உத்தேசித்துப்பண்ணுகிற கர்மஸ்வரூபம் ஈசுவரனுக்கு ஆராதனமாம்படி எங்ஙனேயென்னில்? அக்நீ இந்திராதி தேவதைகள் ஈசுவரனுக்கு சரீர பூதர்களாகையாலும், தான் சரீரியாகையாலும் சரீரத்தைப்பற்றி ஏற்படுகிற ஆராதனங்கள் சரீரிக்கேயாகையாலே ஈசுவரனுக்கு ஆராதனமாகலாம். சேதனர்கள், அந்தர்யாமியான ஈசுவரனுக்கு கர்ம ஆராதனமென்றறியாமல் அக்நீ இந்திராதி தேவர்களுக்கே ஆராதனமாகச் செய்தபோதிலும் பர்யவஸாநத்தில் ஈசுவரனுக்குச்செய்த ஆராதனமாகவே இருக்கிறது. எப்படி எனில்? தேகமே ஆத்மாவென்று நினைத்திருக்கிற அவன் தேகத்துக்குப்பண்ணும் லாளனுதிகளாலுண்டானஸுகம் அந்த தேஹாபிமானியான ஆத்மாவினிடத்தில் பர்யவஸிப்பதுபோல பர்யவஸிக்குமென்றறியத்தக்கதாம். இந்த விஷயத்தையே "யஜந்தி பித்ருந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுதாசநாந் தேபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி பூர்வகம்" என்று கீதாசார்யன் அருளிச்செய்தான். இதனர்த்தம்:— யார் யார் பித்ருக்களையும் தேவர்களையும், அக்நியோடே கூடிய பிராமணர்களையும் என்னையுத்தேசியாமலே ஆராதிக்கிறார்களோ அவர்களும் அங்கங்கு அந்தர்யாமியாய் நின்ற என்னையே ஆராதித்தவராகிறார்கள் என்பதாம்.

இனி, நிரதிசய புருஷார்த்தரூப மோக்ஷப்ரதனுகையாவது.- எல்லாவற்றிற்கும் மேலான புருஷார்த்தமான மோக்ஷத்தை ஈசுவரனே கொடுப்பதாக ப்ரமாணங்களிருப்பதால் ஈசுவரனே மோக்ஷப்ரதனுகிறான். ப்ரமாணங்கள் "நாந்ய: பந்தா அயநாய வித்யதே" "மோக்ஷ மிச்சேத் ஜநார்த்தநாத்" இத்யாதி வாக்கியங்களாம். நைஷதத்தில், ஸ்ரீஹர்ஷகவி, "அதிகத்ய ஜகத்யதீ: ச்வராத் அத முக்திம் புருஷோத்தமாத் தத:" என்பதால் புருஷோத்தமனை நாராயணனே மோக்ஷப்ரதனென்பதைச் சொல்லியிருக்கிறார். இந்த விஷயம் புருஷார்த்த நிரூபணத்தில் விசதமாக நிரூபிக்கப்படும்.

இனி உபாயமாகையாவது.- ஈசுவரன் மோக்ஷத்தைக் கொடுப்பவனும் மோக்ஷரூப பலத்துக்கு ஸாதநமும் தானுயிருக்கை. அதில், உபாயத்வமாவது ஈசுவரனுக்கும் பக்தியாத்யுபாயங்களுக்கும்

ஸாதாரணமாயிருக்கும். அது எப்படியென்னில் உபாயத்வம் பல ஸாதநத்வரூபம்; பக்த்யாதிகள் பலத்துக்குக் காரணமாயிருந்து ஸாதனமாகின்றன. ஈசுவரன் பலப்ரதனாகையாலே பல ஸாதநமாகிறான். அங்ஙனமன்றிக்கே ஈசுவரனே பலப்ரதனாயும் பல காரணமாயுமிருக்கிறான். அதற்கு ப்ரமாணங்கள்.- "மாதா பிதா ப்ராதா நிவாஸ: சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:" என்கிற இதில் சரண சப்தம், "உபாயே க்ருஹரக்ஷித்ரோ:" என்கிறபடி பலப்ரதத்வத்தைக் காட்டிலும் வேறுபட்டிருக்கிற பல கரணத்வபரமாயிருக்கிறது; இப்படியே த்வயத்திலும் சரம சுலோகத்திலும் இருக்கிற சரண சப்தம் கீழ்க்குறித்த சுலோகத்தின்படி பலகரணத்வபரமாயிருக்கிறது; நாராயண சப்தத்தில் அயன சப்தமானது கரணே ல்யுடந்தமாகையால் "இயத இதி-அயனம்" என்கிற வ்யுத்பத்தியைக்கொண்டு ப்ராப்தி கரணத்வத்தைத் சொல்லுகிறது; ஸ்ரீ ராமாயணத்தில் "சரண்யம் சரணஞ்ச த்வாம் ஆஹுர் திவ்ய மஹர்ஷய:" என்று சரண்ய சப்தத்தாலே பலப்ரதத்வத்தையும், சரண சப்தத்தாலே பலகரணத்வத்தையும் சொல்லியிருக்கிறது. ஸஹஸ்ர நாமத்தில், "யோகோ யோக விதாம் நேதா" என்கிற சுலோகத்தில், "யோக:" என்கிற சப்தத்தால் 'யுஜ்யத இதி-யோக:' என்கிற வ்யுத்பத்தியைக் கொண்டு ப்ராப்தி கரணத்வம் சொல்லப்பட்டதாக பட்டர் வ்யாக்யாநம் செய்தருளியிருக்கிறார். அப்படியே கரணம் காரணம் கர்த்தா என்னுமிடத்திலும் கண்டுகொள்ளத் தக்கது. ஸூத்ரகாரரும், "உபபத் தேச:" என்கிற ஸூத்ரத்தால் பல கரணத்வத்தையும், "அத உபபத்தே:" என்கிற ஸூத்ரத்தால் பலப்ரதத்வத்தையும் தனித்து நிரூபித்திருக்கிறார். "உத்தமாதேசமப்ராக்ஷ்ய:" என்கிற சுருதி வாக்கியத்தின் ஆதேச சப்தார்த்த விசாரத்தில், "கன்ப்ரத்யயமானது, காரணாந்தரங்களை அபேக்ஷியாமையாகிற, கரணத்துக்குள்ள ஸாதகதமத்வம் கர்த்தாவுக்குமிருப்பதால் கர்த்தாவைக் கரணமாக விவக்ஷித்துச் சொல்லியபடி" என்று வேதார்த்த ஸங்க்ரகத்திலும், "சாந்தோக்யே கேசிதாஹு:" என்கிற நடாதூர் அம்மாள் அருளிச்செய்த சுலோகத்திலும் சொல்லியிருப்பதால், ப்ரஸாதந கரணத்வம் ஈசுவரனுக்கு உண்டென்று ஏற்படுகிறது. ப்ரஸாதநமாவது:- ஹிதப்ரவ்ருத்தமாகையால் அதுவும் அநிஷ்ட நிவ்ருத்தி பூர்வக இஷ்டப்ராபகத்வ ரூபமாகையால் அது பலகரணத்வ பர்யவஸிதமாம். திருவாய்மொழி

யிலும், "சரணமாகுந் தனதா ளடைந்தார்க்கெல்லாம், மரணமா னல் வைகுந்தம் கொடுக்கும்பிரான்" என்று பலப்ரதத்வத்தையும், பல காரணத்வத்தையும் பிரித்தருளிச் செய்திருக்கிறார். தேசிகனும் "தேவ ஸ்ரீமாந் ஸ்வஸித்தே: கரணம்" என்று பலகாரணத்வத்தை யருளிச்செய்திருக்கிறார். பாகவதத்திலும் "த்வ மகரண ஸ்வராடகில காரகசக்திதர:" என்று காரககாரகசக்தி ஈசுவரனுக்கு உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியாக பலத்துக்கு காரணமும், பலப்ரதனும் ஈசுவரனே ஆகிறான்.

ஆனால் ஈசுவரன் பலத்துக்குக்காரணமாகும்பக்ஷத்தில் பக்திப்ரபத்திகளை சாஸ்த்ரங்களில் பலத்துக்குக் காரணங்களாக விதித்திருப்பது கூடும்படி எங்ஙனே என்னில், ப்ரபத்திஸ்தலத்தில் ப்ரபத்தி ப்ரதிபந்தகாபாவ ரூபமாயும், அதிகாரி விசேஷணமாயும், இருப்பதால் ஈசுவரனே பலகாரணமாகிறான். பக்திஸ்தலத்திலும், ப்ராதிகூல்யநிவ்ருத்தி மாத்ரத்தைக்கொண்டே ப்ரீதனான ஸர்வேசுவரன் "ததாமி புத்தியோகம்தம்" என்கிற வசனப்படி பக்திநிஷ்பத்தியைப் பண்ணிக்கொடுக்கிறான் என்று ஏற்படுவதால் அவனுடைய க்ருபா பலமானபக்தி க்ருபாஜனிகையாகமாட்டாது; ஆனால் "உபாஸீத" "த்யாயீத" என்கிறவிதிக்கு அர்த்தம் என்னென்னில், விதிக்கு க்ருதிஸாத்யத்வமே அர்த்தமாகையாலும், இஷ்டஸாதநத்வம் பாதகமில்லாத விடத்தில் ஆக்ஷேபலப்யமாகையாலும், கேவலக்ருதிஸாத்யத்வத்தையே சொல்லுவதாம். அங்ஙனமன்றிக்கே, ஸ்வயம்ப்ரயோஜனமான ஈசுவரமுகோல்லாஸமாகிற இஷ்டத்துக்கு ஸாதநமென்றும் சொல்லலாம். இந்த விஷயத்தை சுருதப்ரகாசிகையில், ரக்ஷணோந்முகனான ஈசுவரனுக்கு பக்த்யுத்கமரூபமென்று அருளிச்செய்திருக்கிறார். அப்படியன்றிக்கே பக்திக்கு உபாயத்வமே விஹிதமாயிருந்ததேயாகிலும் "த்ரைகுண்ய விஷயா வேதாঃ" என்கிற கீதா சுலோகத்தின்படி சேதனனுடையருசிக்கு அநுகுணமாக பக்தியும் உபாயமாக இருக்கிறது.

ஆனால், சுருதிக்கு பரமதாத்பரியம் ஈசுவரனுடைய பலகாரணத்வத்திலேயாம். அதுவரையில் இவன் வருவதற்காக வழியேற்படுத்தினபடி, அது எப்படிப்போலென்றால், தேஹாத்மாபிமானியாயிருக்கிறவனுக்கு ஐஹிகபலமான மழை முதலியவற்றை ஸாதித்துக்கொடுக்கிற யாகத்தை விதித்தாற்போலேயும், தேஹாதிரிக்தன்

ஆத்மா ஒருவன் உளன்; அவன் ஸ்வதந்த்ரன் என்று இருப்பார்களுக்கு ஸ்வர்க்காதி ஸாதனமான யாகத்தை விதித்தாற்போலேயும், ஸ்வாதந்த்ரியத்தை விட்டு தேவதாந்தர சேஷத்வத்துக்கு இசைந்தவர்களுக்கு தேவதாந்தர ஸாயுஜ்ய ஸாதனமான உபாயத்தை விதித்தாற்போலேயும், பகவத் சேஷத்வ பாரதந்த்ரியங்களே ஸ்வரூபமென்றும், மோக்ஷமே புருஷார்த்தமென்றும் அறிந்தவனுக்கு அந்த சேஷத்வ பாரதந்த்ரியாநுகுணமாக தத்ஸாதநமான பக்தியை விதித்தது. தான் சரீர பூதனாகையாலே தன்னுடைய ரக்ஷணத்தில் தனக்கு யோக்யதை யில்லாமையாகிற அத்யந்த பாரதந்த்ர்யத்தை அறிந்தவனுக்கு அதற்குத் தன்னையுபாயமாக ஸ்வீகரிக்கையாகிற ப்ரபத்தியை விதித்தது. இனி அடுத்த ஸஞ்சிகையில் விஷயங்கள் நிரூபிக்கப்படும். (தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மதுரை ஸ்ரீ சரண்யாபிமத

விஷ்ணுசித்த ராமாநுஜ ஸபையின்

பன்னிரண்டாவது வருஷோத்ஸவ நிகழ்ச்சிக் குறிப்பு.

நாளது ரக்தாக்ஷி௵ மார்கழிமீ 17௳ (1—2—25)ல் இந்த ஸபையின் 12-ம் வருஷோத்ஸவம் மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் காரப்பங்காடு உபயவேதாந்த வித்வான் ஸ்ரீமாந். சிங்கப்பெருமாள் ஸ்வாமியின் அக்ராஸநாதிபத்யத்தில், காலை, மாலை, இரண்டு வேளைகளிலும் நடைபெற்றது. அப்பொழுது, மதுரை ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீ. உ. வே. T. C. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியும், R. நரஸிம்மையங்கார் ஸ்வாமியும், N. R. க்ருஷ்ணசாமி ஐயங்கார் ஸ்வாமியும், S. க்ருஷ்ணசாமி ஐயங்கார் ஸ்வாமியும், ப்ருஹ்மஸ்ரீ V.S. ராமஸ்வாமி சாஸ்த்ரிகளும், செந்தமிழ்ப் பத்திராதிபர் ஸ்ரீ. உ. வே. திரு. நாராயணையங்கார் ஸ்வாமியும், R. சேஷாத்ரி ஐயங்கார் ஸ்வாமியும், திரு. ராமாநுஜ ஐயங்கார் ஸ்வாமியும், வடகரை ஜமீன்தார் ஸ்ரீமாந். ராமபத்ர நாயுடுகாரும், இ. ம. கோபாலக்ருஷ்ணக் கோனாரவர்களும் முதலான நகரவாசிகள் அநேகர் விஜயம் செய்திருந்தார்கள்.

செந்தமிழ் உதவிப் பத்திராதிபர் ஸ்ரீமாந், திரு. ராமாநுஜ ஐயங்காரால் அக்ராஸனரின் வரவேற்புப் பாடல் வாசிக்கப் பெற்றது. அப்போது ஸபையோரின் ப்ரார்த்தனைக்கிணங்கி, ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி அர்ச்சாவதாரம் என்னும் விஷயத்தைக் குறித்து, அர்ச்சை என்பது பூஜார்ஹமான விக்ரஹமென்றும், அது அப்ராக்ருதமாய் இருக்குமென்றும், அதில் எல்லா குணங்களும் பூர்ணமென்றும், அதை விரும்பிப் பூஜிப்பவர்கள் ஈச்வராநுக்ரஹத்துக்குப் பாத்ரராவர் என்றும், ஏகலவ்யனுடைய வ்ருத்தாந்தம் அதற்கு நிரூபகமாகுமென்றும் காட்டி, அவ்வர்ச்சாவதாரத்தில் ஈடுபட்டு ஆழ்வார்கள் பல விடங்களிலும் ப்ரபத்தி பண்ணினார்கள் என்பதையும் அர்ச்சையின் பரபாவங்களையும் அருளிச் செயல்களிலுள்ள பாசுரங்கள் கொண்டு விளக்கி, ஸபையோர் மகிழும்படி உபந்யாசத்தைப் பூர்த்தி செய்தருளினார்.

அதன்பிறகு, வித்வான் ஸ்ரீ. உ. வே. வேங்கடாசார்ய ஸ்வாமி ருக்மணீ பரிணயம் என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு, அதில் ருக்மணி ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் தூதனுப்பியது தோஷமாகாதென்பதற்குப் பல ந்யாயங்கள் காட்டி எல்லோருமறியும்படி தெளிவாய் உபந்யசித்தார்.

அன்று மாலையில், ந்யாயவேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே. தேசிக வரதாச்சார்ய ஸ்வாமியால் உடையவர் வைபவம் என்னும் விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. அதில் அவர், உடையவர் செய்தருளின ஸ்ரீ பாஷ்யத்தின் அருமை பெருமைகளைக் குறித்து, அது ஒன்றே ப்ரஹ்மஸூத்ரம் செய்த ஸ்ரீ வேதவ்யாச பகவானுடைய ஹ்ருதயத்தை உள்ளபடி அறிந்து உரைப்பதென்றும், அதிலுள்ள அர்த்த விசேஷங்களெல்லாம் பூர்வர்களுடைய திருவுள்ளத்திற்கிசைந்தனவே என்றும், அவை அவருக்கு ஆசார்யாநுக்ரஹத்தாலும் பகவத் கடாக்ஷத்தாலுமே லபித்தனவென்றும், அதனால் அவை உபதேச ப்ராப்தமாக வந்தனவாகவே கருதத் தகுமென்றும் நிரூபித்துப் பின்பு, இராமாநுஜ நூற்றந்தாதியிலுள்ள 'காரேய் கருணை யிராமாநுசா' என்னும் பாசுரத்திற்கு மிகவும் இனிமையாகவும் தெளிவாகவும் வ்யாக்யான மருளிச்செய்து, உலகத்திலுள்ள எல்லாரும் நல் ஞானப்பேறு பெற்று உய்யும்படி உடையவர் பேரருள்புரிந்த தன்மையையும் விரிவாக உபபாதித்தார்.

அதன்பிறகு விசிஷ்டாத்வைதம் என்ற விஷயத்தை, காண்டூர் ஸ்ரீ. உ. வே. ராமாநுஜாசார்ய ஸ்வாமி, சாஸ்த்ராபிப்பிராயங்களுக்குப்பொருந்த அபூர்வமான லௌகிக த்ருஷ்டாந்தங்கள் பலவற்றை எடுத்துக்காட்டி எல்லோரும் ஸந்தோஷிக்கும்படி மிகவும் அழகாகப் பேசிமுடித்தார்.

பின்பு அக்ராஸனர் முடிவுரைகூறி, ஸபை மேன்மேலும் அபிவிர்த்தி யடையவேண்டுமென்று வாழ்த்தியருளினர். காரியதர்சி, அக்ராஸனருக்கும் உபந்யாஸகர்களுக்கும் ஸபையோரின் நன்றியறிதலைத் தெரிவித்து, இடம்கொடுத்து உதவின சேதுபதி ஹைஸ்கூல், கார்யதர்சியவர்களுக்கும் ஹெட்மாஸ்டரவர்களுக்கும் மற்றையோருக்கும் வந்தனமளித்தனர். ஸபையிலுள்ளோர் எல்லாருக்கும் புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கப்பட்டன. இவ்வகையாக ஸ்ரீ சரண்யாபிமத விஷ்ணுசித்த ராமாநுஜ ஸபையின் புன்னிரண்டாம் வருஷோத்ஸவம் மிக விமரிசையாக நிறைவேறியது.

ஷை வருஷோத்ஸவ ஸமயத்தில்
செந்தமிழ் உதவிப்பத்திராதிபர்
திரு, கி, இராமாநுஜ ஐயங்கார்
அக்ராஸனருக்குக் கூறிய நல்வரவும் மங்களவாழ்த்தும்

ஒருநாயகனுகியநெடியோ னெப்பிலாதகருணையினன்
உலகமுய்யவன் றுபெரும் பூதூருதித்தமுனிவரானல்
இருமாநிலத்திற்பரசமய விருளோக்கடிதற்கிரவியென
எழுந்தபெரியதரிசனந்தா னிந்நாணன்குவிளங்கிடவப்
பெருமான்றனேயவதரித்தா னென்றுபெரியோர்பேசும்வகை
பெருஞ்சீர்க்காரப்பங்காட்டிற் பிறங்கிப்பிறமாமதமடங்கத்
திருவாய்மொழியின்பொருளுடனச் செய்யாமறையின்பொருளுலகந்
தெளியமுழங்கும்புகழ்படைத்த சிங்கப்பெருமான்வருகவே.

வாழிமறை வாணர்வாழி தமிழ்வேதம்
வாழி யழகன் மலர்ப்பதங்கள்—வாழியரோ
ஏழ்பாரு முய்ய இயல்விரிக்கு மாரியரோ
டாழ்வார்கள் செம்பொன் னடி

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41
364

சென்னை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

14-வது வார்ஷிக ஸங்கம்.

நமது பத்திரிகையின் கார்த்திகைப் பகுதியில் வெளியிட்டிருந்தபடி ஷை ஸபையின் வருஷோத்ஸவ தினங்களான மார்கழி மீ 15, 16, 17௳ களை எல்லோரும் அதிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். அவ்வாறே அதற்கு முந்தின நாளாகிய 14௳ யன்று பகல் 2 மணிக்கு, அக்ராஸநாதிபதியாகக் குறிப்பிட்ட கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீ உப. வே. ஸ்ரீநிவாஸஐயங்கார் ஸ்வாமியை வரவேற்பதற்காகநகரவாஸிகளான ஸ்ரீ வைஷ்ணவர்கள் ரயில்வே ஸ்டேஷனில் வந்துகூடினர். ஸப்ஜட்ஜ் ஸ்ரீ உ. வே. V. பாஷ்யமையங்கார் ஸ்வாமியும், K. ராமையங்கார் ஸ்வாமியும், T. C. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியும் முதலான ப்ரமுகர்கள் அநேகர் அங்கு வந்திருந்தனர்.

அப்போது மிகுந்த ஸந்தோஷத்துடன் எல்லோரும் எதிர்கொள்ள அக்ராஸநாதிபதி ஸ்டேஷனில் வந்து இறங்கினவுடனே, ஷை வார்ஷிக ஸங்கத்தின் வரவேற்பு ஸபையாருக்காக, செந்தமிழ்ப் பத்திராதிபர் ஸ்ரீ. உ. வே. திரு-நாராயணையங்கார் ஸ்வாமியும், ஸப் ஜட்ஜ் பாஷ்யமையங்கார் ஸ்வாமியும் அக்ராஸநாதிபதிக்குப் பூமாலை வழங்கினர். ஸ்ரீ கூடலழகப்பெருமாள் ஸந்நிதி ப்ரஸாதமும் அளிக்கப்பெற்றது.

பின்பு ஸ்ரீ வைஷ்ணவ ஸமூகம் புடைசூழ்ந்துவர மங்களவாத்யங்களுடன் அதிவிமரிசையாக அக்ராஸனரை அவர்களுடைய விடுதிக்கு அழைத்துச் சென்றனர். அன்று இரவிலும் அவ்வாறே அவர்களைப் பெருமாள்கோவிலுக்கு எழுந்தருளப்பண்ணி ஸ்ரீ கூடலழகரையும், மதுரவல்லித் தாயாரையும் மங்களாசாஸனம் செய்வித்தார்கள்.

15௳ யாகிய மறுநாட்காலையில் சேதுபதி ஹைஸ்கூல் ஹாலில் ஷை ஸபையின் 14வது வார்ஷிக ஸங்கம் கூடிற்று. வட ஆர்க்காடு ஜில்லாவைத் தவிர மற்ற எல்லாவிடங்களிலுமிருந்து ப்ரதிநிதிகளாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ வைஷ்ணவர் அநேகர் ஸேவை ஸாதித்தனர். உபந்யாசகர்களாகக் குறிப்பிடப்பட்டவர்களும் பிறருமான உபயவேதாந்த பாரங்கதர்கள் பலர் அங்கு எழுந்தருளியிருந்தனர்.

மதுரை நகர வாசிகளாய் மற்றுள்ள ஆஸ்திக ஜனங்களும், லௌகிக ஸ்ரீமான்களும் வந்து நிறைந்து ஸபையை அலங்கரித்தார்கள். யதாக்ரமமாக ஸபை ஆரம்பிக்கப்பட்டது.

ஸ்ரீ. உ. வே. பாஷ்யமையங்கார் ஸ்வாமியால் அக்ராஸனருக்கு நல்வரவுப் பத்திரம் வாசிக்கலாயிற்று. அதன்பிறகு மதுரை ஸ்தலத்தின் பெருமையையும், ஸபையின் அபிவிர்த்தியையும், மற்றும் வைஷ்ணவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய அவச்யமான சில விஷயங்களையும் குறித்து அக்ராஸனாதிபதி முன்னுரையாக ஓர் உபந்யாசம் செய்தனர்.

அதை உபக்ரமமாகக்கொண்டு, அன்றுமுதல் குறிப்பிட்ட மூன்று தினங்களிலும், காலை மாலை இரண்டுவேளைகளும் அரிய பெரிய விஷயங்கள் பல வித்வான்களால் உபந்யசிக்கப்பட்டன. அந்த ப்ரஸங்கமாரியின் அமுத வெள்ளத்தை யாவரும் செவியார மடுத்து இன்புற்று க்ருதார்த்தராயினர். இடையிடையே ஸபையின் கார்ய நிர்வாஹத்தைப்பற்றிய ஆலோசனைகள் நடந்தன. இரவில் உபந்யாசங்கள் முடிந்தபிறகு வீணைக்கச்சேரியும் நடந்தது.

கடைசியாக 17உ மாலை, ஸபைக்கு எழுந்தருளியிருந்த வித்வான்களை எல்லாம் வீற்றிருக்கச்செய்து புகைப்படம் எடுத்தார்கள். ஸபைக்கு மங்களவாழ்த்தாகப் பண்டிதர்கள் சிலர் பாமாலை இயற்றி வாசித்தனர். அப்போது வித்வத் ஸம்பாவனையும் அளிக்கப்பெற்றது. அதன்பிறகு அக்ராஸனாதிபதி முடிவுரையாக, ஸ்ரீவைஷ்ணவ ஸமூகத்தினர்க்குள் முக்கியமாய்ச் செய்துகொள்ள வேண்டிய சில சீர்திருத்தங்களைக் குறித்தும், ஸித்தாந்த வளர்ச்சியின்பொருட்டு அவர்கள் முயற்சிக்கவேண்டிய வழிகளைக் குறித்தும், மிகப் பொருத்தமான பல விஷயங்களை எடுத்துச் சொல்லினர்.

பின்பு ஷ வார்ஷிக ஸங்கத்தின் வரவேற்பு ஸபையாருக்காக ஸ்ரீ. உ. வே. T. C. ஸ்ரீநிவாஸஐயங்கார் ஸ்வாமி, அக்ராஸனருக்கும் ஸபையோருக்கும், வருஷோத்ஸவம் நன்றாய் நடந்தேறுமாறு த்ரவ்யோபகாரம் செய்த கனவான்களுக்கும், பிறர்க்கும் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்து எல்லோரும் மகிழும்படி மிகவும் இனிமையாகப் பேசினர். அதன்பின்பு புஷ்ப சந்தன தாம்பூ

லாதிகள் வழங்க ஸபைகலைந்தது. இந்தவிதமாக சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 14-வது வருஷபூர்த்திக் கொண்டாட்டம் இவ்வூரில் மிகவும் சிறப்பாக நிறைவேறியது.

ஷை வருஷோத்ஸவ ஸமயத்தில் ஸப்ஜட்ஜ் ஸ்ரீ உப. வா. பாஷ்யமையங்கார் ஸ்வாமிசொல்லிய ஸ்வாகதத்தின் ஸங்க்ரஹம்.

ஸ்ரீய:பதியாய். அவாப்த ஸமஸ்த காமனாய், ஸர்வ சேஷியாய் கூராராழி வெண்சங்கேந்தி, ஆதிசேஷனான சிங்காஸனத்தில், மகாகுண்டல ஹாரகேயூர கடக ஸ்ரீவத்ஸ கௌஸ்துப முக்ததாம உதரபந்தன காஞ்சீகுண நூபுராதி அபரிமித திவ்யபூஷண பூஷிதனாய், வீற்றிருந்து எழுலகுந்தனிக்கோல் செலுத்தும் ஸ்ரீவைகுண்ட நாதனாகிய ஸர்வேச்வரன் அகில புவனங்களிலுள்ள ஸமஸ்த சேதனர்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுத்துத் தன்னுடைய கைங்கர்ய ஸாம்ராஜ்பத்தை அடையும்படி செய்விப்பானாக.

இந்த ஸமஹாஸபையில் கூடியிருக்கும் பாகவதோத்தமர்களை வரவேற்குமாறு அடியேனை நியமித்ததற்கு அத்யந்த க்ருதக்ஞதையுடையவனாக இருக்கிறேன். அந்தக் கைங்கர்யத்தை யதாப்ரகாரமாக நிறைவேற்ற அடியேன் ஸர்வ ப்ரகாரத்தாலும் அசக்தனாயிருந்தும் அது அடியேனுக்கு பாக்யவசத்தாலே லபித்தது.

ஸ்வாமிகாள்! இம்மதுராநகரவாஸிகள் சார்பிலும், அடியேன் சார்பிலும் தேவரீர்களுக்கு ஹார்த்தமான ஸ்வாகதம் கூறுகின்றேன். அடியோங்களுடைய குற்றங்களைப் பாராமல் இந்த திவ்ய தேசத்தின் பெருமையை நினைத்து ஸ்வாமிகள் த்ருப்தியடையும்படி ப்ரார்த்திக்கின்றேன். இந்தக்ஷேத்ரத்தின் பெருமையை அதிகமாகஎடுத்துரைக்க வேண்டியதில்லை. மஹரிஷிகளைத் தூரீகரிக்கும் ஆழ்வார்களில் தலைவராய்ப் பெரியாழ்வார் என்றுபெயர் பெற்றவரான விஷ்ணுசித்தர், இத்தேசத்தை ஆண்ட வல்லபதேவன் என்னும் ராஜாவின் வித்வத்ஸபையில் ஸர்வேச்வரனுடைய நியமனத்தால், ஸ்ரீமந்நாராயணனே பாரதத்வம் என்று நிரூபித்து, அதற்காக ராஜாவினால் யானையின்மேல் ஏற்றி ஊர்வலம்செய்யப்படும் ஸமயத்தில், அந்த மஹோத்ஸவத்தைப் பார்த்து ஆநந்திப்

பதற்காக ஆதரத்துடன் பிராட்டி ஸஹிதனாய் பஞ்சாயுதம் தரித்து கரிய திருமேனியோடு பெரிய திருவடிமேல் ஏறிவந்த அப்பன் ஸர்வேச்வரனைப் பல்லாண்டு பாடியது இங்கேயன்றோ?

இப்படித் திருப்பல்லாண்டு விளைந்த நிலமாயும், கூடலழகர் என்று பெயர் வழங்கும் ஸௌந்தரராஜப் பெருமாளால் அதிஷ்டானம் பண்ணப்பட்டும், ஒருபுறத்தில் தென்திருவேங்கடம் என்று சொல்லப்படுகிற திருமாலிருஞ் சோலையையும், ஒருபுறத்தில் பெரியாழ்வாரும் அவர் பெற்றெடுத்த பெண்பிள்ளையான ஆண்டாளும் திருவவதரித்த ஸ்ரீவில்லிபுத்தூரையும், மத்யே தாளதாமரைத் தடமணி வயல்சூழ்ந்து, தோளும் நான்குடைச் சுரிகுழல் கமலக்கண் கனிவாய்க் காளமேகாதிஷ்டிதமான திருமோகூரையும் உடைய இந்த க்ஷேத்ரத்திற்கு ஸ்வாமிகளை ப்ரணாம பூர்வகமாய் ஆயிரம் முறை நல்வரவு கூறுகின்றேன்.

ஸ்வாமிகள்போலொத்த ஸ்ரீ வைஷ்ணவர்களின் பெருமையை எடுத்துரைக்க அடியேன் வல்லேனோ? "எவர்கள் புஜங்களை சங்க சக்ரங்கள் அலங்கரிக்கின்றனவோ, எவர்கள் நெற்றியில் ஊர்த்வ புண்ட்ரம் விளங்குகின்றதோ, எவர்கள் கழுத்தில் திருமணித்தாவடம் ப்ரகாசிக்கின்றதோ, அவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள்; அவர்கள் உலகத்தைப் பரிசுத்தம் செய்கிறார்கள்:" என்று வைஷ்ணவ சிஹ்னங்களையும், அவற்றைத் தரித்தவர்களின் பெருமையையும் யமன் தன்னுடைய படர்களுக்கு எடுத்துரைத்து, அவர்களை அந்தரங்கமாய் அழைத்து, "மதுசூதனனாகிய ஸர்வேச்வரனுடைய தாஸர்களைக் கண்டால் விலகிப்போங்கோள்; அவர்களிடத்தில் நமக்குக் கார்யம் இல்லை; இதரர்களுக்கு நான் ஸ்வாமியே தவிர வைஷ்ணவர்களுக்கு நான் ஸ்வாமியல்ல; அவர்கள் எனக்கு மேம்பட்டவர்கள்:" என்று சொன்னான். அன்றியும் ஸ்ரீ க்ருஷ்ணபகவான் த்வாரகையில் நின்றும் ஆசரித விரோதி நிரஸனார்த்தமாக எழுந்தருளின போது, வாயில்காப்போர், ஸ்வாமி மீண்டு எழுந்தருளும்வரை இங்கே புகுரக் கடவர் யார் என்று விண்ணப்பம் செய்ய, "பகவத் தாஸ்ய ஸூசகமான சக்ராங்கனம் உடையவர்களைத் தடையின்றி உள்ளே விடுங்கோள்; மற்றவர்கள் விஷயத்தில் ஜாக்ரதையாக இருங்கோள்" என்று அருளிச்செய்து, பதிவ்ரதைகள் தம் பாதிவ்ரத்யத்துக்கு அடையாளமாக மங்களஸூத்ரத்தை தரிப்பது போல் தங்கள் சேஷத்வத்துக்கு அடையாளமாக சங்க சக்ராங்

ளெங்களை மகிழ்ச்சியுடன் தரிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களின் ஏற்றத்தைப் புலப்படுத்தி யருளினான். அதுவுந்தவிர ஆழ்வார்களும், ஆசார்யர்களும், பகவானைக்காட்டிலும் பாகவதர்கள் தமக்கு உத்தேச்யரென்பதை விரிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். நம்மாழ்வார், "வியன் மூவுலகு பெறினும் போய்த் தானே தானே யானும், புயல் மேகம்போல் திருமேனி யம்மான் புனைபூம் கழலடிக்கீழ், சயமே அடிமை தலை நின்றார் திருத்தாள்வணங்கி இம்மையே, பயனே இன்பம் யான் பெற்றது உறுமோ பாவியேனுக்கே:" என்று திருவாய் மலர்ந்தருளினர். அவர் திருவடிகளில் ஆச்ரயித்த மதுரகவிகளும், "கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப், பண்ணிய பெருமாயன் என் அப்பனில், நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால், அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே" என்றார். நம் இராமாநுஜனுக்கு ப்ராசார்யரான ஸ்ரீ ஆளவந்தாரும், பகவானுடைய தாஸ்ய ஸுகத்தை அறிந்தவர்களுடைய திருமாளிகையில் ஒரு புழுவாகவாவது தன் பிறப்பை வேண்டி, அது அல்லாமல் தன்னை சதுர்முக ப்ரும்மாவாய்ப் பிறப்பித்தாலும் அது வேண்டாமென்று திக்கரித்தார். இன்னும் இதற்கு ப்ரமாணங்கள் பலகோடி இத்தகைய ப்ரபாவமுடைய ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸபை இவ்வருஷம் இங்கே கூடப்பெற்றது இந்நகரவாஸிகளின் பாக்யமே யாகும்.

ஸ்வாமிகாள்! இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸபையானது 14 வருஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டு நம்முடைய மதம், ஸித்தாந்தம் இவைகளை அபிவிர்த்தி செய்துவருவது எல்லார்க்கும் தெரிந்த விஷயமே. இதற்கு ஆரம்பம் அல்பமாயிருந்தது. ஆனாலும் இது ஸ்ரீவைஷ்ணவ மதத்தின் பெருமையை அறிந்து அதில் ஊற்றமும் ப்ரவீணதையும் உள்ள மஹான்களாலே ஆரம்பித்து நடத்தப்பட்டு வருவதால் வரவர புஷ்டியும் அபிவிர்த்தியும் அடைந்து இப்பொழுது எல்லாருக்கும் வாஸுதேவதருச் சாயைபோல் நிழலும் இடமும் கொடுத்து ஸம்சார தாபத்ரயத்தைப்போக்கி வைஷ்ணவீயமான தாரக போஷக போக்யங்களை ஊட்டத்தக்க நிலைமையில் இருக்கிறது. தன் உத்பத்தி ஸ்தானத்திற்கு ஸமீபமாயுள்ள பல விடங்களிலும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பரவச்செய்த இந்த ஸபை இப்பொழுது இவ்விடத்திற்கும் வந்திருக்கிறது. பண்டிப் பெரும்பதியை ஆக்கிப் பழிபாவம், கொண்டிங்கு வாழ்வாரைக்

கூருதே, எண்டிசையும், பேர்த்தவா நான்குடையான் பேசோதிக்
தீர்த்தகரராய்த் திரிவது ஸ்ரீவைஷ்ணவர்களின் கடமையன்ரே?
இங்கு வந்திருக்கும் ஸ்வாமிகள் லோகஹிதைஷிணியான ராமாநுஜ
திவ்யாஜ்ஞாரத்நங்களை நாலு பக்கத்திலும் இறைத்து ஸர்வர்களை
யும் உஜ்ஜீவிப்பிக்க மூட்டை மூட்டையாய்க் கொண்டுவந்திருக்
கிறார்கள். மதுராவாஸிகளான நாம் அந்த ரத்நங்களை க்ரஹிக்கு
சிரஸாவஹிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஸ்ரீவைஷ்ணவர்கள்
என்று பெயர் வைத்துக்கொள்ளாதவர்கள் தமக்கு இந்த ஸபையில்
ஸம்பந்தமில்லையென்று ஒருவேளை நினைக்கலாம். ஆனால் அது
பொருந்தாது. ஸ்ரீவைஷ்ணவர் என்னும் பெயர் சிலர்க்கே இடு
குறியாய் வழங்கினாலும், பொதுவாக அதன் வாஸ்தவார்த்தத்தில்
வைஷ்ணவரல்லாதவர் ஒருவருமில்லை. வைஷ்ணவன் என்பதற்கு
விஷ்ணு ஸம்பந்தி என்று அர்த்தம். விஷ்ணு என்றால் வ்யாபித்
திருப்பவன் என்று பொருளாம். ஸர்வ வ்யாபியான பகவானுக்குப்
புறம்பானவர்களும் உண்டோ? ஆகையால் இந்த ஸபையில் எல்
லோருக்கும் உரிமையுண்டு.

தேசாந்தரங்களிலிருந்து இந்த ஸங்கத்துக்கு க்ருபையாய்
எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளுக்கு ஒரு விஜ்ஞாபனம், ஸ்வாமிக
ளுடைய க்ருபைக்கு ஈடாக உபசரிப்பதற்கு நாங்கள் அசக்தர்கள்.
த்ருணீக்ருத விரிஞ்சாதிகளான ஸ்வாமிகளுக்கு அடியோங்கள்
என்னதான் செய்யமுடியும்? ஸ்ரீ க்ருஷ்ணபகவான் விதுருடைய
'குடிசைக்கு' எழுந்தருளினபோது விதுரர் "என்னிடத்தில் உள்ள
தனம் சம்ப்ரமம் ஒன்றேயாகும்; அதைக்கொண்டு தேவரீர் த்ருப்தி
யடையவேண்டும்" என்று விண்ணப்பம் செய்ததுபோல, உபசா
ராபதேசேன அடியோங்களால் பண்ணப்படும் அபசாரங்களைப்
பொறுத்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

இந்த ஸங்கத்துக்கு இப்பொழுது அக்ராஸனாதிபதியை வரித்
தல் வேண்டும். அந்த ஸ்தானத்தை வஹிக்க உபய வேதாந்தா
சார்யரான ஸ்ரீமாந். வன்பாக்கம் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி க்ரு
பையுடன் ஸம்மதித்திருக்கிறார். அதற்குத் தகுந்த சக்தியும்,
ஞானமும், குணங்களும் அந்த ஸ்வாமியிடம், இருப்பதை ஸகல
ரும் அறிவர். ஆபிஜாத்யராயும் வைதிக ச்ரத்தை விச்வாஸமுடை
யவராயும், லௌகிகத்திலும் உந்நதபதவில் உள்ளவருமான அந்த

ஸ்வாமியைத்தவிர மலினமடைந்திருக்கும் நமது மத ஸித்தாந்தங்களை உத்தரிப்பிக்கக்கூடிய ஸாமர்த்யம் யார்க்கு இருக்கிறது? ஆகையால் அவரை வரிப்பதில் அடியேனுக்குள்ள நிரதிசய ப்ரீதியைத் தெரிவித்து, அக்ராஸனுதிபதியின் கார்யத்தை நிர்வஹிக்கும்படி அந்த ஸ்வாமியை ஸவிநயம் ப்ரார்த்திக்கிறேன்.

அக்ராஸனர் உபந்யாசம்

இந்தப் பெரியநகரில் இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபை அழைக்கப்பட்டிருக்கும் விஷயம் மிகவும் சந்தோஷகரமாயிருக்கிறது. ஸ்ரீ. உப. வே. பாஷ்யமையங்கார் மதுரையின் விசேஷத்தைப்பற்றி நல்லவாவு கூறுமிடத்து ஒரு சிறிது எடுத்துரைத்தார். அடியேனுக்கு ஆசார்யதுல்யரான பண்டிதபூஷணம் பகவத்விஷய வித்வான் ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யஸ்வாமியும் பின்பு விஸ்தாரமாக உபந்யஸிப்பதாலும் அதனை அறியலாம். நம்முடைய ஸித்தாந்தத்திற்குப் பரதத்வ நிர்த்தாரணமே முதன்மையாகச் சிறந்தது. அது இந்த நகரத்தில் நடைபெற்றது. அதன் பிரயோஜனமாகச் செய்யத்தக்க கைங்கர்யத்தின் எல்லை நிலம் பகவானுக்குப் பல்லாண்டு பாடுவது. அதுவும் இந்த நகரிலேயே அமைந்தது. இப்படிப்பட்ட மஹாநகரில் இதுவரை இந்த மஹாஸபை அழைக்கப்படாதிருந்தது வருந்தத்தக்கதே. ஆயினும் வருந்தியபின்பு அடைந்த இன்பமே சிறந்ததாக மதிக்கத்தக்கது.

இந்நகரில் இந்த ஸம்ப்ரதாயத்தில் மிகுந்த சிரத்தையுடையவர்களான ஸ்ரீ. உப. கே. ராமையங்கார், டி. வி. ஸ்ரீநிவாஸையங்கார், வா. பாஷ்யமையங்கார் முதலானவர்கள் தகுந்த முயற்சிசெய்து இப்பொழுது ஸபையை நடத்துவதனால் நமக்கு மிகுந்த ஸந்தோஷமுண்டாகிறது அன்றியும், வேதம் தமிழ்செய்த ஆழ்வார்களை முதன்மையாகவுடைய இந்த ஸபையானது தமிழ்நாட்டின் தலைநகரான இவ்வூரில் தமிழில் விசேஷமான பிரக்யாதியடைந்து பிரதான பண்டிதராயிருக்கும் ராகவையங்கார் முதலியவர்களுடன் கூடி நடைபெறுவது மிகவும் சந்தோஷகரமானதே. இப்படிப்பட்ட சங்கம் கூடுவதற்கு ஏற்றதாயிருப்பதுபற்றியே இந்நகரத்துக் கூடல் என்ற பெயரும் பொருத்தமானதென் றெண்ணுகிறேன். இப்படியான இந்தமஹாசபைக்கு ஒருகுறையும் இருக்கிறது

அதாவது அடியேனுக்கு அக்ராசனுதிபத்யம் அளித்திருப்பதே. இது அவையடக்கமன்று அடியேன் மனப்பூர்வமாக நினைத்திருப்பதையே சொல்லியபடி. ஒவ்வொரு வருஷத்திலும் நம் ஸம்பிரதாயத்திற்காக விசேஷமாக உபகாரம் செய்யும் சிறந்த வித்வானொருவருக்கு இந்த அக்ராசனுதிபத்யம் கொடுக்கப்பட வேண்டுமென்பது அடியேனுடைய அபிப்பிராயம். நாம் நினைக்கிறபடியே நடக்கிறதா? இந்த சங்கத்தை நடத்துவதற்கு முன் வந்திருக்கும் என்னுடைய நண்பர்கள் என்னை அக்ராசனத்திலிருக்கும்படி நியமித்திருக்கிறார்கள். இதற்குக்காரணம், வைதிகோத்தமரான பண்டிதசிகாமணிகள் அக்ராசனராயிருந்தால் இது கேவலம் வைதிக சபையென்று லௌகிகர்கள் விலகிவிடக்கூடுமென்பது போலும். வைதிகோத்தமருடன் லௌகிகப்ரமுகர்களும் சேர்ந்தால்தான் இந்த சபை சரிவர நடைபெறுவதாகும். அடியேனுக்கு இந்த சபையின் அக்ராசனுதிபத்யத்தை மேற்கொள்ளுதற்கு ஆற்றலில்லையாயினும் பாகவதோத்மர்களான தேவரீர்களுடைய திருவாக்கினல் உண்டென்று அநுக்ரகிக்கப்பட்டதால் அது பொய்யாகாமல் உள்ளதாகவே ஆகிவிடட்டும்.

இந்த சபையானது வருஷந்தோறும் வெவ்வேறிடத்தில் நடத்தப்பட்டு வருகிறது. இதனல் அடுத்தடுத்து ஸம்ப்ரதாயம் பரவிமேம்படுகிறது. இதை உடனிருந்து அநுபவித்து வருபவர்கள் அறிவார்கள். இந்த ஸபையைப் புதிதாகக்கூட்டு மிடங்களில் ச்ரத்தையுடையவர்களும் உத்ஸாஹிகளும் காணப்படுகிறார்கள். ''ஆஸ்போடயந்தி பிதர: ப்ரந்ருத்யந்தி பிதாமஹா:'' என்றபடியே தம்குலத்தில் ஒருவன் வைஷ்ணவனயிருந்தால் பித்ருக்கள் மிகுந்த ஆனந்தமடைகிறார்கள் என்பது உண்மையானுலுமாகட்டும் இல்லாதுபோனலும் போகட்டும். இந்த ஸபையில் உத்லாகமுள்ள ஒருவரைப்பார்த்தால் நமக்கே அப்படிப்பட்ட ஆனந்த முண்டாவது பிரத்யக்ஷமாயிருக்கிறது. இம் முயற்சியால் உயர்ச்சியடைவோமாகில் நம் ரஸாநுபவமும் உயர்ச்சியடையுமென்பதிற் சந்தேகமில்லை.

வரவேற்புஸபையின் அக்ராஸநாதிபதி இந்த ஸபையின் வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார். இந்த ஸபை தொடக்கத்திற் சில வருஷங்கள் அகோபிலமடத்தின் சிஷ்யஸபையாக

வும், பிறகு வைஷ்ணவர்களுள் ஒரு பகுதியார்க்குரியதாகவும் மாறுதலடைந்து இப்பொழுது ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கெல்லாம் பொதுவான ஸபையாகவே விளங்குகிறது. இதுவும் இதன் வளர்ச்சிக்கு அறிகுறியாயிருக்கிறது. இதுவரையில் இந்த ஸபையால் ஸாதிக்கப்பெற்றிருக்கும் பிரயோஜனம் மிகுதியாயில்லையானாலும் இந்த ஸபை சிற்சிலரை ஆஸ்திகராக்கிக்கொண்டே வருகிறது. ஒவ்வொரு ஊரிலும் ரஸிகர்களும் சிரத்தையுடையவர்களும் இருக்கிறார்கள். அவர்களெல்லோரையும் ஒன்றுசேர்த்தோமானால் இந்த ஸபை அதி சீக்கிரத்தில் வ்ருத்தியடைந்துவிடும். ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவரும் வருஷத்துக்கு ஒரு ரூபா கொடுப்பார்களானால் இந்த ஸபைக்கு வேண்டிய மூலதனம் அளவுகடந்ததாகும். இது முடியாத காரியமன்று. இப்படிப்பல இடங்களிற் சிதறியிருக்கும் அபிமானிகளை ஒன்றுசேர்ப்பதற்காகவே தம்முடைய காலத்தைச் செலவிட வல்லார் இல்லாமையினால் இந்த ஸபையின் அபிவிர்த்தி மட்டுப்பட்டிருக்கிறது.

பகவத்ராமாநுஜஸித்தாந்தமான இந்த ஸ்ரீ வைஷ்ணவமதம் மற்ற வைஷ்ணவமதங்களைக் காட்டிலும் சிறந்ததென்று சரித்திர விமர்சகர் அறிந்திருக்கலாம். மற்ற வைஷ்ணவமதங்களும் வங்காளம், பம்பாய், பூனா, குஜராத் தென்னிந்தியா முதலிய இடங்களில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலே தோன்றிப்பரவிவருகின்றன அவற்றுள், நம் இராமாநுஜசித்தாந்தம் மேலானதென்று நம் பூர்வாசார்யர்களும் உபதேசித்துப் போந்தார்கள். இந்த விசிஷ்டாத்வைதம் பரவுவதற்கு முன் கர்மங்களே மோக்ஷஸாதனமாகக் கருதப்பட்டன. நம்முடைய ஸித்தாந்தத்தில் பக்தி ப்ரபத்திகளே மோக்ஷஹேதுவென்றும், அதற்கு நித்யகர்மானுஷ்டானங்கள் பரம்பரையாக ஸாதனமென்றும் தெளியப்பட்டபடியால் ப்ராம்ணர்களுக்கே மோக்ஷமென்றும், கர்மங்களே மோக்ஷஸாதனமென்றும் சொல்லிவந்த மதங்கள் கண்டிக்கப்பட்டன. தேகத்துடன் பிறந்த ஜாதியைப் போக்காமலே எல்லோரும் மோக்ஷமடைதற்கு யோக்யதையுடையராவரென்பது நமது ஸித்தாந்தம். தத்வம் அனுபவத்தை ஒட்டியேயிருக்கவேண்டுமாகையால் உலகத்தை மித்யையென்று சொல்வது அனுபவவிரோதமாகையால் அது பொருந்தாது மோக்ஷானுபவத்தையும் அங்கு அனுபவிக்கும் குணங்களை

யும் அனுபவத்தையொட்டிச் சொல்லுவது நம்முடைய ஸித்தாந்தமே. இவையெல்லாம்வேதாந்த சாஸ்த்ரஸித்தமென்று நம்முடைய ஆசார்யர்கள் அறுதியிட்டிருக்கிறார்கள்.

இப்படியான நம்முடைய மதத்தைப் பரிசீலனம் செய்ய மேல் நாட்டு வித்வான்கள் இதன் மேன்மையை யறிந்து இது ஒருகாலத்தில் உலகமுழுவதும் பரவத்தக்கதென்றெண்ணுகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆராய்ச்சிகளில் முதன்மை பெற்று நின்றது பரிணாம சாஸ்த்ரம். அதன் கடைசியெல்லையாயுள்ளது சாரீரகசாஸ்த்ரம். அதன் முதன்மையான கொள்கை அங்காங்கிகள் சம்பந்தித்திருப்பதே பிரகிருதி யென்பதாம். நம்முடைய மதத்தில் இப்படிப்பட்ட ஸம்பந்தம் பிரகிருதிக்கு மட்டுமென்று பிரகிருதியிற் சிறந்த ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கும் இவ்வித சம்பந்தம் கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது பிரகிருதி பரிணாமமான சரீரத்துக்கும் அதினின்றும் வேறுபட்ட ஜீவாத்மாவுக்கும் எப்படிச் சரீர சரீரிசம்பந்த மிருக்கிறதோ அப்படியே ஜீவாத்மாவிற்கும் அதினின்றும் வேறுபட்ட பரமாத்மாவிற்கும் சரீர சரீரி பாவசம்பந்தம் இருக்கிறதென்பதாம். இப்படி ஆத்மாக்களுக்கும் அநாத்மாக்களுக்கும் உள்ளசம்பந்தத்தைப் பிரதிபாதிக்கும் சாஸ்த்ரமும் சாரீரகத்துள் அடங்கியதென்றே கொள்ளவேண்டும். எந்த வஸ்துவைப் பார்த்தாலும் இது ஒன்றா? இரண்டா? என்ற சந்தேகம் உண்டாகிறது. ஆராய்ந்து பார்த்தால் ஒன்றில் இரண்டு, இரண்டில் ஒன்று என்ற விசிஷ்டாத்வைதத் தெளிவு உண்டாகிறது நம்மால்காணப்படும் பொருள்களெல்லாம் அவயவாவயவிகளின் கூட்டமாகவே காணப்படுகின்றன. பிரிவு தோன்றவில்லை. இப்படியேபரிணாம சாஸ்திர முதலியவற்றிலும் அவயவாவயவியிலேயே முடிவு இருப்பதைக் காணலாம். இப்படிப்பட்ட சித்தாந்தமே ஆழ்வார்களாலும் ஆசார்யர்களாலும் அறுதியிடப்பட்டிருக்கிறது.

இப்படியான உண்மைவாய்ந்த நம் சித்தாந்தம் உலகத்தில் ஒரு காலத்தில்எல்லோராலும் அங்கீகரிக்கப்படும் என்றேநம்புகிறேன். ஆயினும், அது இப்பொழுதுமிகவும் மாலிந்ய மடைந்திருக்கிறது. இதை ஆதரிப்பவர் அங்குமிங்கும் காணப்பட்டாலும் வைதிகர்களும் லௌகிகர்களும் ஒன்று சேர்ந்து இதன் முன்னேற்றத்தை

விரும்பி யுழைப்பவர்களாய்க் காணப்படவில்லை. லௌகிகர்களிற் பெரும்பான்மையோர் திருமண்காப்பு, திருநாமம், யஜ்ஞோபவீதம் இவைகளை யுடையராயிருப்பதைத் தவிர ஸம்ப்ரதாயஜ்ஞானம் சிறிதும் உடையவராகக் காணப்படவில்லை. முற்காலத்தில் ஆசிரம தர்மங்கள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. இதன் உயர்வான கொள்கையை மேனாட்டார் மிகவும் கொண்டாடுகிறார்கள். இந்த ஆசிரமதர்மங்கள் இப்பொழுது மிகவும் குன்றிவிட்டன. தற்காலத்தில் நவீனர்களால் மதவிஷயமாகப் போதிக்கப்படும் குயுக்திகளைத் தடுப்பாரில்லை. எழுநூறுவருஷங்களுக்கு முன்பே ஸ்ரீதேசிகன் தத்வஹித புருஷார்த்தங்களை எப்படிப் பிரதிபாதித்தாரோ அப்படியே ஸம்ப்ரதாயம் நின்றுவிட்டது. சம்ப்ரதாயம் என்னும் வ்ருக்ஷம் மேன்மேலும் தழைத்துக்கொண்டு வந்தாலன்றி உயிர்பெற்றிருக்கமாட்டாது. முன் நம் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் இந்த மதத்தின் கொள்கைகளைப் பலபடியாகவிதைத்துப் பயிராக்கியிருக்கிறார்கள். அப்பயிரினின்றும் பலனடைய விரும்பினால் பயிர்க்குக் களைகளைந்து எருவிட்டு நீர்பாய்ச்சி எப்படிக் காக்கவேண்டுமோ அப்படியே நம் சம்ப்ரதாயப் பயிர் பலனளிக்கும்படி வேண்டியவற்றைச் செய்வது அவசியமாகும். அதற்கு நாம் செய்ய வேண்டிய காரியம் இரண்டுண்டு. அதில் முதன்மையானது இழிகுணங்களையொழித்தல்; அதாவது இந்த சித்தாந்தத்திலுள்ளவருக்குள் இப்பொழுது காணப்படும் ஒற்றுமைக்குறைவு, வீணசச்சரவு இவையுண்டாகாதபடி செய்வது. எங்குபார்த்தாலும் பிறர் நம்மைச் சிரிக்கும்படி தென்கலை வடகலைச் சண்டையும், மடம் முனித்ரயங்களின் மாறுபாடும் உண்டாய் வருகின்றன. இப்படி மாறுபடுபவர்களுக்குள், திருமண்காப்பிலும் சில அநுஷ்டானங்களிலும் தவிர வேறு கொள்கைகளில் மாறுபாடிருப்பதாகக் காணப்படவில்லை. வீண் ஆக்கிரஹத்தினால் இந்தச் சண்டை விளைந்து கொண்டுவருகிறது. இப்படிச் சண்டைசெய்து கொண்டிருப்பது நம்முடைய ஸ்வரூபத்துக்கு உசிதமானதன்று. ஆகையால் பகவத்ராமாநுஜஸித்தாந்திகளான நாம் எல்லோரும் ஒருமுகமாக நம் சித்தாந்தம் தழைத்தோங்கும்படி இனி ஒருநாளும் சச்சரவு செய்யாமல் அந்யோந்யம் ஸௌஹ்ருத்துக்களாயிருக்கவேண்டுமென்று ஒவ்வொருவரும் சங்கற்பித்துக்கொள்ளவேண்டும்.

இரண்டாவது காரியம் நாளடைவில் உண்டாகக்கூடியது.

இது முக்கியாமுக்யவிபாகம்பண்ணுகை- ஜ்ஞாதாக்களான பண்டிதர்கள் மாறுபாடுள்ளவிஷயங்களில் எது முக்யமான அம்சம் என்பதை யோசித்து அமுக்யாம்சங்களைவிட்டு முக்யாம்சங்களையே கைக்கொள்ளச்செய்யவேண்டும். இப்படியாகச் சச்சரவுகளைப் போக்கிக்கொண்டோமானால் நம்முடைய ஸம்ப்ரதாயம் வளர்ச்சியடையத் தடையில்லை.

ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் சிறப்பாக விதிக்கப்பட்டிருக்கும் பஞ்ச மஹாயஜ்ஞம்போல் நாமெல்லோரும் இனிச்செய்யவேண்டிய கார்யமும் ஐந்துவகைப்படும்.

க. தன்னை உண்மையாகவே ஸ்ரீவைஷ்ணவனுக்கிக்கொள்ளுதல்; அதாவது நாமத்தினால்மாத்ரம் வைஷ்ணவனாகக்காட்டாமல் ஆந்தரமான ஸ்ரீவைஷ்ணவலக்ஷணங்களும் அமைந்தவனாயிருத்தல்.

உ. ஸித்தாந்தத்தில் ருசியும் பலப்ராப்தியும் உண்டாவதற்கான ப்ரயத்னம்செய்தல் லௌகிக வ்யாபாரங்களிருப்பதனால் காலமில்லை யென்றும், ஓய்வுண்டானபின்பு காலக்ஷேபாதிகள் செய்யலாமென்றும் எண்ணாமல் ப்ரதிதினமும் சிறிது நேரமாவது ஸ்வரூபவிஷயமான ஆசாரணையைத் தவறாது செய்துவருதல். [இப்படிச் செய்தகாலத்தைக் கடைசியிற் சேர்த்துப்பார்த்தால் மிகவும் பெரிதாய்விடும்.]

ங. நம்மைச் சேர்ந்தவர்களையும் இப்படி ஸம்ப்ரதாயத்தில் அபிருசியுடையராம்படி செய்வதும், அப்படி அவர்கள் சீர்படுவதற்கு வேண்டிய முயற்சி செய்வதும்.

[இந்த விஷயத்தில் நம்முடைய சிறுவர்களுக்கே நாமெல்லோரும் துரோகிகளாயிருக்கிறோம். நாம் அவர்களைத் தற்காலத்தில்நவீன முறைகளைப்போதிக்கும் பாடசாலைக்குஅனுப்புகிறோம். அங்கு அவர்களுக்குப் ப்ராக்ருதிசாஸ்த்ரமே முதன்மையாகக் கற்பிக்கப்படுகிறது. அப்பயிற்சியால் நாஸ்திகபுத்தியே யுண்டாகிறது. அதுவும் ஒருவகையாக நல்லதாம். முதலில் நாஸ்திக்யத்திற்சென்று முட்டுப்பட்டுண்டாகும் ஆஸ்திக்யமே நிலையாக நிற்கும்; ஆனலும், முதலிலுண்டாகும் நாஸ்திக்யத்திலேயே ஊன்றி நிற்கும்படி விட்டுவிடக்கூடாது. நம்முடைய சமயாசாரங்கள் இன்னவென்று அவர்கள் சிறிதேனும் அறியவில்லை. அப்படி யிருக்கை

தில் அவர்களுக்கு இதில் விருப்பம் எப்படி உண்டாகும். இது நம்முடைய குற்றமே. இதைச் சீர்திருத்துவதற்கு நாம் சிறிதும் முயலவில்லை. இப்படியே நம் பெண்டிர்களையும் கவனியாதிருக்கிறோம். பெண்டிர்களுடைய ஆசாரத்திலன்றோ நம்முடைய தர்மம் நிலைபெறவேண்டும். "மாதரார் கற்பினின்றன அறங்கள்" என்றன்றோ கம்பனும் அறுதியிட்டிருக்கிறார். தற்காலத்தில் ஹார்மோனியம் வாசிக்கவும், இரண்டு மூன்று வார்த்தைகளை ஆங்கிலத்திற் பேசவும், ஆங்கிலர்களுடன் பழகவும் குழந்தைகளுக்குப் பயிற்றிவிட்டால் அதுவே பிறப்பிற்குப் பயன் என்றெண்ணுகிறோம். இப்படிப்பட்டநிலை நீடித்து நிற்குமாகில் நம்முடைய மதாசாரங்கள் அடியோடு நாசமடையுமென்பது சத்தியம். இவ்விஷயத்தை உடனே கவனிக்கவேண்டியது அவசியமான கார்யம்]

ச. பூர்வாசார்யர்களால் உலகம் உய்யும்படி உபதேசிக்கப்பட்ட இம் மதத்தில் முற்காலத்திற் பலர் சேர்ந்தார்கள்; இப்பொழுது பல நூற்றாண்டுகளாக ஒருவரும் சேர்க்கப்படவில்லை. இப்படிப்பட்ட மதம் ஒன்று இருக்கிறதென்றே அநேகருக்குத் தெரியாது. இதைக் கடைசியாயறிந்த மேனாட்டறிஞர்கள் இது மிகவும் வியக்கத்தக்கதாயிருக்கிறதென்று பலபடியாகக் கொண்டாடியிருக்கிறார்கள். இதனை நம்முடைய பெண்டுபிள்ளைகளுக்கும் அறிவிக்கமாட்டாதிருக்கும் நாம் அயலோர்க்கறிவியாதிருந்ததைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. இவ்விஷயங்களை நாம் இனிமேலாவது கவனிக்கவேண்டும்.

ரு. இது மாத்திரமல்ல. மற்ற மதஸ்தர்கள் நம்முடைய மதத்தை ஆக்ரமிக்கத் தொடங்கிவிட்டார்கள். நம்முடைய மதத்திற் பிறந்தவர்களே நம்முடையமதத்தின் உயர்வை அறியாமல் பிறமதங்களைப் பின்பற்றுகிறார்கள். மேனாட்டவர்கள் இந்த மதத்தை அறிந்தபிறகு இப்படிப்பட்ட மதம் இருக்கிறதென்று அறியாமல் மிகவும் சிரமப்பட்டோமேயென்று வருத்தப்படுகிறார்கள். நம்முடைய மதத்தை நாம் எல்லோருக்கும் உபதேசிக்கவேண்டியது நமது கடமை. ரஹஸ்யார்த்தங்களை உபதேசிக்கச்சொல்லவில்லை; தத்வப்ரதிபாத்தியங்களான விஷயங்களை உபதேசிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

இப்படியான பல காரியங்களைச் செய்யவேண்டியது ஸ்ரீவைஷ்ணவர்களின் கடமையாயிருக்க இவற்றுள் ஒரு விஷயத்தையேனும் நாம் கவனித்தோமில்லை. பகவத்ஸங்கல்பத்தினால் நமக்குச் சிரத்தையுண்டாகும் காலம் இதுவென்று அறியமுடியாது, ஆனால் ஒருநாளும் சிரத்தையுண்டாகமாட்டாதோவென்று பயப்பட வேண்டாம். இந்த ஸம்ப்ரதாயம் தழைப்பதற்கு இப்பொழுது முளை கிளம்பியிருக்கிறது. இனி வருங்காலநிலைமை மிகவும் உயர்வுடையதாகும் அப்பொழுது இது பிறசமயத்தவராலும் கொண்டாடத்தக்கதாய் அங்கீகரிக்கப்படும். அதற்கு நாம் கீழ்க்கூறிய விஷயங்களில் முயற்சிசெய்யவேண்டும். இந்த ஸபை பதினான்கு வருஷங்களாகச் செய்துவரும் பிரசாரணத்தை இன்னும்பல இடங்களிற் செய்து இந்த ஸபையைப் பலப்படுத்துவதற்கு லௌகிகப் பெருமக்களும் வைதிகவித்வான்களும் ஒன்று சேர்ந்து தக்க முயற்சி செய்துவரவேண்டும்.

ஸ்ரீ:

சந்தாதார்களுக்கு அறிவிப்பு.

ஸ்ரீய:பதியான ஸர்வேசுவரன் திருவருளினால் இவ்வருஷத்திய பத்திரிகை இத்துடன் பூரணமடைகிறது. இதுவரையிலும் வெளியான பத்திரிகைகளில் ஸம்ப்ரதாயத்தைப் பற்றிய அரிய பெரிய விஷயங்களும், சில சீர்திருத்தங்களும் வெளியாயின. இதன் தகுதியறிந்தே பல்பேர்களும் இதை ஆதரித்தார்கள். அவர்கட்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டவனாயிருக்கிறேன். நிற்க,

நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை அபிவிர்த்தி செய்தற்கென்றே பலபத்திரிகைகள்தோன்றி அவற்றிற்கு ஏற்ற மூலதனம் இல்லாததினால் நடைபெறாது நின்றுவிட்டவிஷயம் யாவருமறிவர் அதுபோல் இப்பத்திரிகையும் நின்று விடுமோவென்று சந்தாதார்கள் அபிப்பிராயங்கொண்டிருக்கலாம். இந்த சஞ்சிகை இவ்வளவு நாளாகத்தாமதப்பட்டு வெளியேறியதற்குக் காரணம் அச்சாபீஸ்காரர்களின் இடையூற்றின் மிகுதியேயாம். இது விஷயத்தில் சந்தாதாரெல்லாம் மன்னிப்பார்களாக. சென்ற 11-வது சஞ்சிகையில் தெரிவித்துக் கொண்டபடி குரோதன ஹூ சித்திரை மாதத்தில்

நமது ஹரிஸமய திவாகரம் என்ற பத்திரிகையின் பெயரால் ஒரு அச்சியந்திரசாலை ஸ்தாபிக்கப்பெறும். அதற்குரிய வஸ்துக்களெல்லாம் ஸித்தமாய்விட்டன. இனி தை, மாசி, பங்குனி மாதப்பத்திரிகைகள் மிகவும்விரைவாகவெளியிடப்படும். அதன் பிறகு அந்தந்த மாதத்தின் பத்திரிகையும் அந்தந்த மாதத்திலே வெளியாகும். அதற்கு யாதொரு சந்தேகமுமில்லை ஆதலால் இப்பத்திரிகைக்குச் சந்தாதார்களாகச் சேரலாம். இன்னும் சில சந்தாதார்கள் சந்தா ரூபா அனுப்பாதிருக்கிறார்கள். இனியாவது தயவு செய்து இரண்டாம் தொகுதிக்குஞ்சேர்த்து ரூபா அனுப்புவார்களாக.

இப்பத்திரிகை பலருக்கும் உபகாரமாயிருக்க வேண்டுமென்றே சிறந்தவித்வான்களின் துணைகொண்டு ஆரம்பிக்கப்பட்டதாம். இதிற்கிடைக்கும்ஊதியத்தை ஸம்ப்ரதாயபாடசாலை ஏற்படுத்தற்கு மூலதனமாக உபயோகப்படுத்தக் கருதியிருக்கிறது. ஸ்வப் பிரயோஜனமாக உபயோகப்படுத்திக் கொள்வதில்லை. ஆதலால் பலரும் இதை ஆதரிக்க விரும்புவார்களாகில் மிகுதியாகப் பண்டு சேர்ந்துவிடும். இது ஒருவருக்கும் கஷ்டமின்றி முடிவுபெறுகிற காரியமாம். இனி ஏற்படுத்தப்போகிற அச்சியந்திர சாலைக்காக ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வானமாமலை ஜீயர் ஸ்வாமி முதலான ப்ரமுகர்கள் திரவிய சகாயஞ்செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். மேலும் அறிஞர்பலரும் இதற்குச் சகாயஞ்செய்வார்களென்றே எதிர்பார்க்கப்படுகிறது. இது விஷயமாக மிகுந்த பொருள் உபகரிக்க முடியாதவர்கள் சந்தாதார்களாகச் சேருவதோடு பிறர்களையும் சந்தாதார்களாகச் சேர்ப்பிக்கவேண்டுகிறேன்.

இதுவரை வெளியான பத்திரிகைகளில் தமிழ் நடை மிகவும் கடினமாக விருக்கிறதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறதாகத் தெரிகிறது. இனிவரும் பகுதிகளில் அக்குறையை நீக்குதற்கு மிகவும் எளிய நடையில் அரிய விஷயங்கள் தக்க பண்டிதர்களைக்கொண்டு எழுதி வெளியிட உத்தேசித்திருக்கிறது. மேலும் இதில் பொது விஷயங்களும், திவ்ய தேசங்களில் நடைபெறுகிற விஷயங்களும், சில சீர்திருத்தங்களும் வேண்டியவளவு எழுதப்பெறும்.

பத்திரிகையை வி. பி. மூலமாய்அனுப்புவதில் அதிகச்செலவு ஏற்படுவதால் சந்தாதார்கள் இரண்டாந்தொகுதியின் சந்தாப் பணத்தை மணியார்டர் மூலமாய் அனுப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

ப. அ.

379

ஸ்ரீ:

பிழையும் திருத்தமும்.

முதற்பகுதி முதற்பதிப்பு.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	26	வைஷ்ணவாச்சாரமும்	வைஷ்ணவாசாரமும்
5	5	முயறசி	முயற்சி
,,	8	பரமாதமா	பரமாத்மா
,,	24	கலவி	கல்வி
8	11	தூல்	நூல்
16	30	வணகம்	வணக்கம்
20	11	கொள்வன	கொள்வது
,,	14	ஸக்தி	சக்தி
,,	15	காரணனாகின்றான்	காரணமாகின்றான்
,,	16	கார்ணன்	காரணம்
21	18	ஸக்தி	சக்தி
,,	27	ஸர்வேஸ்வரன்	ஸர்வேசுவரன்
23	25	,,	,,
,,	,,	ஸக்தி	சக்தி
24	9	,,	,,
,,	10	,,	,,
25	11	ஒ	ஓ
27	9	காமவசத்தால்	கர்மவசத்தால்
30	7	உண்ணை	உன்னை

380

முதற்பகுதி இரண்டாம்பதிப்பு.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	10	நூல்	நூல்
3	12	குறிப்பட்ட	குறிப்பிட்ட
4	18	துளையட	துளையுட்
6	1	யாவறும்	யாவரும்
,,	24	பறகற்று	பறக்கற்று
8	7	விதயாசாலை	வித்யாசாலை
,,	17	போது	பொது
10	22	பாட்டில்லாத	பாடில்லாத
18	,,	அநுபவித்ற்கு	அநுபவித்தற்கு
20	16	ஸக்தி	சக்தி
,,	17	காரணன்	காரணம்
31	5	மஹாப்பாபம்	மஹாபாபம்
,,	12	காரணனும்	காரணமாயும்
,,	18	மஹாப்பாபி	மஹாபாபி
33	26	ஆத்மாமானவையும்	ஆத்மாவையும்
38	11	ஜாசுருதி	ஜாநசுருதி
,,	21	றென்றது	ரென்றது
43	8	பிரிதி	பிரதி
56	6	உவகை	உலகை
58	12	நவத்தீபம்	நவத்வீவம்
,,	19	அவ்வவ்	அவ்வப்

74	23	பொருந்தாதலால்	பொருந்தாதாதலால்
84	24	பாதுகாய்!	சரணாலய!
,,	32	ஸாத்திர	சாஸ்திர
13	17	தாபா	தாஹா
95	14	பரிஸுத்த	பரிஸுத்தியும்
98	29	படுகிறதோ	படுமோ
104	6	ஏட்ப	ஏற்ப
130	32	ச்ருத்யோர்	ச்ருத்யோ
139	4	குணர்	குணேர்
145	21	தாமங்களை ய	தர்மங்களையும்
152	26	தார்	தவர்
157	15	ஸ்ரீதாதேவி	ஸ்ரீதேவி
,,	30	ரக்ஷிய	ரக்ஷய
166	12	ஜர்வஜ்ஞர்	ஸர்வஜ்ஞர்
,,	13	சக்ராணி	சக்ராஸி
167	24	ஸவாதந்தர்ய	ஸ்வாதந்தர்ய
169	22	மணவள	மணவாள
170	31	பின்ளையும்	பிள்ளையும்
171	1	அவ்ருகே	அவ்வருகே
,,	4	இப்போது	இருப்பது
172	17	அவஹாகனம்	அவகாஹனம்
173	7	நின்றது	முடிக்கப்பெற்றதாயிற்று
,,	8	வேதத்தை	வேதாதிசாஸ்திரங்களை

Roll-117 1248 382
2592

,,	11	அவஹாகித்தறியும்	அவகாஹித்தறியும்
,,	18	வேதத்தை	வேதாதிசாஸ்திரங்களை
,,	29	அவஹாகித்து	அவகாஹித்து
175	11	திட்டல்	திட்டப்
,,	15	,,	,,
17	6	காமாநி	காநி
180	2	உத்ரம்	உத்தரம்
188	7	தொடுவுமி	தொடுவுழி
190	19	ருடிக்கிறது	டிருக்கிறது
204	7	வந்திருக்ரும்	வந்திருக்கும்
215	25	ஆசிரயமாயும்	ஆசிரயமாய்
216	16	ஆராத்யனென்றும்	ஆராத்யனென்பதாலும்
223	1	ஈசுவர கர்த்ருத்வம்	கோவர்தனமெடுத்தவிருத்[,தாந்தம்
239	30	குடத்தி	குடத்வத்தி
240	5	பாதங்களாயும்	பாதகங்களாயும்
241	24	க:சிதே	க:சிதேவ
248	9	ஸ்தேத்ரம்	ஸ்தோத்திர
272	17	வஸ்துங்கள்	வஸ்துக்கள்
273	7	வதுஸ்வுக்கு	வஸ்துவுக்கு
,,	15	அனைந்துலகும்	அனைத்துலகும்
287	29	ஸ்ரீமாந்	திவான்பகதூர் ஸ்ரீமாந்
288	15	ருக்மணீ	ருக்மிணீ
,,	15	ருக்மண்ணி	ருக்மிணீ
,,	20	வரதாச்சார்ய	வரதாசார்ய

முதற்பகுதி முதற்பதிப்பில் 29, 30-ம் பக்கங்களில் வந்துள்ள ததீ என்ற சொற்களைத் ததி எனத் திருத்திக்கொள்க.

101-ம் பக்கக் குறிப்புரை 2-வது வரியில் சியேநயாகமாவது:- கழுகினுற் செய்யும் யாகமென்றிருப்பதை, பருந்து பாய்ந்து இரையைப் பற்றுவதுபோலச் சத்துருவைப் பற்றிக்கொல்ல வல்லதொரு யாக விசேஷமென்று திருத்திக்கொள்க:

157-ம் பக்கம் 12-வது வரியில் வாழுகின்றனர் என்பதின் பின், அவ்வாறே அதர்மத்தைக் கைப்பற்றினவர் என்ற வாக்கியத்தைச் சேர்த்துக்கொள்க.

247-ம் பக்கம் 20-வது வரி பாட்டினிறுதியில் என்பது என்ற பதத்தைச் சேர்த்துக்கொள்க.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY